**மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரக இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள், சென்னை–5.**
**முன்னிலை : திரு.மா.இராஜையா**

**செ.மு.ந.க.எண்.2699/ம.இ.நிர்.3/ 2019** **நாள்: 21.03.209**

பொருள்: பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம், அரசு மறுவாழ்வு இல்லங்கள் சென்னை –5.தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV (2015–2016)ல் தேர்வு செய்யப்பட்டு அரசு மறுவாழ்வு இல்லம், பரனூர், செங்கல்பட்டு - இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.வா.ஆனந்தன், என்பவர் பணிவரன் முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை:
1. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் சென்னை-5. அவர்களின் செயல்முறை ஆணை எண் 0967/நிர்.2/18, நாள்:20.02.2018
2. நிர்வாக அலுவலர், அரசு மறுவாழ்வு இல்லம், பரனூர், செங்கல்பட்டு, அவர்களின் கடித எண் 70/இநிஉ/18, நாள்:08.03.2019

**************

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் (2015-2016) தொகுதி [IV] ல் தேர்வு செய்யப்பட்டு பார்வை 1ல் காணும் இவ்வாணையரக செயல்முறை ஆணையின்படி, செங்கல்பட்டு, பரனூர், அரசு மறுவாழ்வு இல்லத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.வா.ஆனந்தன், என்பவருக்கு அவர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 22.02.2018 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

2) மேற்படி பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாளான 22.02.2018 பி.ப முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண்பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

3) தகுதிகாண்பருவக் காலத்தில் மேற்படி தனியர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

- அலுவலக நடைமுறை நூல் (D.O.M)

4) வரையறுக்கப்பட்ட மேற்படி தேர்வுகளை பணியில் சேர்ந்த நாள் முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெற தவறும் பட்சத்தில் இதே காரணத்திற்காக எவ்வித முன்னறிவிப்புமின்றி தனியர் பணியிலிருந்து நீக்கப்படுவாரென்றும் ஆணையிடப்படுகிறது.

5) தேர்வு செய்யப்பட்ட மேற்படி நபர் தமிழ்மொழியை பள்ளி இறுதி வகுப்பில் ஒரு பாடமாகக் கொள்ளாதிருப்பின் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு, 31(3)–ன்படி முதல் ஈராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் அவ்வாறு தேர்ச்சி பெறத்தவறின் இதே காரணத்திற்காக அரசுப் பணியிலிருந்து எவ்வித முன்னறிவிப்புமின்றி நீக்கப்படுவாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

6) மேலும் மேற்காணும் பணியாளர்களுக்கு தற்காலிக பணியமைப்பு விதிகளின்படி தமிழ்நாடு அரசு ஊழியர்களின் (வரையறுக்கப்பட்ட பணிகள்) விதி 2016–ன் பிரிவு 28 (1)–ன் படி தனியர் பணியேற்ற நாள் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுப்படுகிறது.

7) திரு.வா.ஆனந்தன், இளநிலை உதவியாளர், என்பவரின் பணிப்பதிவேடு (தொகுதி–2) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை கால நீட்சி செய்யாமல் உடனடியாக இவ்வாணையரகத்திற்கு அனுப்பி வைக்குமாறு காஞ்சிபுரம் மாவட்டம், பரனூர், நிர்வாக அலுவலர் மேலும் பணிக்கப்படுகிறார்.

இணைப்பு–பணிப்பதிவேடு (தொகுதி– 2)

(ஒம்/- மா.இராஜையா)
இணை இயக்குநர்

பெறுநர்

திரு.வா.ஆனந்தன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மறுவாழ்வு இல்லம்,
பரனூர், செங்கல்பட்டு,
காஞ்சிபுரம் மாவட்டம்.

- ( நிர்வாக அலுவலர் மூலமாக )

நகல்:

1. நிர்வாக அலுவலர், அரசு மறுவாழ்வு இல்லம், பரனூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம்.
2. மாவட்ட கருவூல /சார்நிலை அலுவலர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம்.
3. இருப்பு கோப்பு / உதிரி

//உத்தரவின்படி//

உதவி தனி அலுவலர்